# இந்தியாவின் இரும்பு மங்கை.....!

Published on : 14th December 2016 12:27 PM | அ+அ அ- |



அன்பில் அன்னை தெரசாவாகவும், அறிவில் அவ்வையாராகவும், துணிவில் ஜான்சிராணி லட்சுமிபாயாகவும் (அன்பு-அறிவு-துணிவு என்ற தாரக மந்திரத்தோடு...) பாரதியார் கண்ட புதுமைப்பெண்ணாக வாழ்ந்து மறைந்தவர் முதல்வர் ஜெயலலிதா. இவரை எவராலும் குறைத்து மதிப்பிட முடியாது.

அப்பல்லோ மருத்துவமனையில் ஜெயலலிதா சிகிச்சை பெற்றுவந்தபோதுகூட இவரது தீவிர எதிர்ப்பாளர்கள் கூட.... "ஆளத்தான் வேண்டாம் என்றோம்... வாழ வேண்டாம் என்று சொல்லவில்லையே...' என்று நலம் பெற பிரார்த்தனை செய்தார்கள்.

தன்னம்பிக்கையும் தைரியமும் படைத்தவரென்றாலும் உழைப்பில் உன்னதமாகவும் விளங்கிய அதே வேளையில், ஈகை குணத்தில் எட்டாவது வள்ளலாகவும் வாழ்ந்து மறைந்தவர் முதல்வர் ஜெயலலிதா.

திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கத்தை பூர்விகமாகக் கொண்டவர் என்றாலும், மண்டியா மாவட்டம், மேல்கோட்டையில் 1948-ஆம் ஆண்டு பிப்ரவரி 24-ஆம் தேதி பிறந்தவர். தனது தாய் வேதவல்லியோடு (சந்தியா) சென்னைக்கு வந்தவர் கோமளவல்லி என்கிற ஜெயலலிதா. சர்ச் பார்க் கான்வென்டில் படித்தபோது, கல்வியிலும் கெட்டிக்கார மாணவியாக இருந்தார். படிக்கும்போதே கல்வியிலும், போட்டிகளிலும்

வெற்றி பெற்று பெரியார், அண்ணா, காமராஜர் போன்ற தலைவர்களிடம் பரிசுகளைப் பெற்றவர்.

கல்வி பயிலும்போதே ஓய்வு நேரத்தில், விடுமுறை நாள்களில் திரைத்துறையில் நடிப்பில் சிறந்து விளங்கி முத்திரை பதித்தவர். கலைப் பயணம் 1980-ஆம் ஆண்டு வரை தொடர்ந்தாலும், எம்ஜிஆர், சிவாஜி போன்ற தலைமுறை நடிகர்களோடு நடித்தவர்... அதற்கடுத்த தலைமுறை நடிகர்களோடு கதாநாயகியாகவோ, மற்ற கேரக்டர்களிலோ நடிக்க விரும்பாமல் கலைத்துறைக்கு முழுக்கு போட்டவர்.

நடிகையாக இருந்தபோது, ஒருமுறை "தான் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்' என்று ஜெயலலிதா பேட்டியளித்திருந்தார். இதற்கு அடுத்த சில நாள்களில் மைசூரில் நடைபெற்ற படப்பிடிப்பு ஒன்றில் பங்கேற்றிருந்த ஜெயலலிதாவை கன்னட அமைப்பினர் ஆயுதங்களுடன் சூழ்ந்தனர். "தமிழ் ஒழிக- கன்னடம் வாழ்க' என்று கூறுமாறு வலியுறுத்தினர். தனக்கு ஆபத்து நெருங்கிய நிலையில் கூட கொண்ட கொள்கையில் உறுதியாக இருந்து தடம் மாறாமல் இருந்தவர். அச்சமில்லை... அச்சமில்லை... என்ற பாரதியாரின் வரிகளுக்கு நிகரான வீரம் மிகுந்த பெண்மணியாக, பாரதி கண்ட புதுமைப்பெண்ணாகவே இருந்தார்.

நடிகையாக இருந்தபோதும், அரசியல் தலைவராக இருந்தபோதும், முதல்வராக இருந்தபோதும் விளம்பரங்கள் இல்லாமல் உதவிகள் பல புரிந்தவர். எம்ஜிஆர் அறக்கட்டளை வாயிலாகவும், கடந்த சில ஆண்டுகளாக அம்மா பெஸ்ட் அறக்கட்டளை வாயிலாகவும் கல்வி உதவிகள், மருத்துவ உதவிகள், நலிந்த கட்சியினருக்கு குடும்ப நிதியுதவிகளை செய்துவந்தவர்.

போயஸ் தோட்டத்தில் உள்ள வேதா இல்லத்தில் குடிபெயர்ந்தபோது, பத்திரிகையாளர்களை அழைத்து தனியே விருந்து நடத்தி கௌரவப்படுத்தியவர். மக்கள் நலனை பற்றியே எப்போதும் சிந்தித்து வந்தவர். தமிழர்களையே தனது உறவுகளாக பாவித்து, "எனக்கென்று குடும்பம் இல்லை. மக்களுக்காக நான்.. மக்களால் நான்...' என்று அவ்வப்போது தெரிவித்துவந்தவர்.

சில ஆண்டுகள் ஓய்வுக்கு பின்னர், எம்ஜிஆரால் அரசியலுக்கு அழைத்து வரப்பட்டார். கட்சியில் சேர்ந்த சில மாதங்களிலேயே 1980-களில் மாநிலங்களவை உறுப்பினராக, சத்துணவுத் திட்டத்தின் உயர்மட்டக் குழு உறுப்பினராக, அதிமுக கொள்கை பரப்புச் செயலராக அடுத்தடுத்து உயர்ந்தார்.

கலைத் துறையில் சாதனைகள் என்றால், அரசியலிலும் அளப்பரிய சாதனைகள். ஆதரவாளர்களைவிட எதிரிகளும் துரோகிகளும்தான் அதிகம். பெண் என்றும் பாராமல் அவரை வீழ்த்த நினைத்தோர் ஏராளம். எம்ஜிஆர் உடல்நலக்குறைவால் மருத்துவமனையில் இருந்தபோது, 1984-ஆம் ஆண்டு சட்டப் பேரவைத் தேர்தல் பிரசாரத்தில் எம்ஜிஆருக்கு பின்னர் ஜெயலலிதாதான் என்பதை மக்கள் அங்கீகரித்துவிட்டனர். இருப்பினும், எம்ஜிஆர் மறைவுக்கு பின்னர், ஜானகியா,

ஜெயலலிதாவா என்று பிளவுபட்டு 1989-ஆம் ஆண்டு தேர்தலில் எதிர்க்கட்சித் தலைவர் பதவியை மக்கள் அளித்து, ஜெயலலிதாவை கட்சியினரும், மக்களும் ஆதரித்தனர். பின்னர், பிளவுபட்ட அதிமுக இணைந்தது.

1991-ஆம் ஆண்டு தேர்தலையும் ஜெயலலிதா சந்தித்தார். முதல்வராகவும் பொறுப்பேற்றார். இதன் பின்னர் மக்களுக்கு, முக்கியமாக மகளிருக்கு அவர் அளித்த திட்டங்கள் ஏராளம்.

1991-96-ஆம் ஆண்டு முதல் ஆட்சிக் காலத்தில் மகளிர் குழுக்கள் உருவாக்கம், மகளிர் பிரச்னைகளைத் தீர்க்க பெண் காவலர்களையே கொண்டு முழுக்க முழுக்க உருவான மகளிர் காவல் நிலையங்கள், கமாண்டோ வீரர்கள், சமூக நலத் துறையில் பெண்களுக்கான எண்ணற்றத் திட்டங்கள், பெண் சிசுக் கொலையைத் தடுக்கும் வகையில் தொட்டில் குழந்தைகள் திட்டம்.... போன்ற எண்ணற்ற திட்டங்கள் அவரை அரசியலிலும் ஹீரோயின் ஆக்கியது.

இதையடுத்து, 2001-06, 2011-2016-ஆம் ஆண்டுகளில் தனது பதவிக் காலத்திலும் பிளஸ் 1 மாணவிகளுக்கான இலவச சைக்கிள் திட்டம் (பிற்காலத்தில் மாணவர்களுக்கும் விரிவாக்கம்), கோயில்களில் அன்னதானம் வழங்கும் திட்டம், பெண்களுக்கு விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின்விசிறி வழங்குதல், பள்ளி மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினிகள்- விலையில்லா கல்வி உபகரணங்கள், முதியோர் உதவித்தொகை ரூ. 1,000-ஆக உயர்வு, இளம்பெண்களின் திருமணத்துக்கு தாலிக்கு தங்கம், விலையில்லா அரிசி, குறைந்த விலையில் அம்மா குடிநீர், மக்கள் குறைகளைத் தீர்க்க அம்மா அழைப்பு மையம், அம்மா உணவகங்கள், அம்மா திட்ட முகாம்கள், ஏழை கர்ப்பிணிகளுக்கு வளைகாப்பு, கர்ப்பிணிகளுக்கு அம்மா பரிசு பெட்டகம், மகளிர் குழுக்களுக்கு தாராளமான கடனுதவி-சுழல்நிதி, அம்மா மகப்பேறு சஞ்சீவி திட்டம் என்று எண்ணற்ற திட்டங்களால், மகளிர் வாழ்க்கையில் முன்னேற்றம் காணத் தொடங்கினர்.

இந்தப் பல திட்டங்களை நாட்டின் பிற மாநிலங்களும், உலகின் பல நாடுகளும் கூட பின்பற்றத் தொடங்கியுள்ளன. ஏன்.... பெண்ணுரிமைக்காக முதல்வர் ஜெயலலிதாவின் அளப்பரிய சாதனைகளைப் பார்த்து வியந்த அன்னை தெரசாவும், அமெரிக்காவின் ஹிலாரி கிளிண்டனும் தேடி வந்து பாராட்டியுள்ளனர் என்றால், ஜெயலலிதாவை பற்றி சொல்வதற்கு வேறு என்ன இருக்கிறது.

ஆணாதிக்கம் மிக்க அரசியல் சமூகத்தில் நாடு போற்றும் சிறந்த அரசியல் தலைவராக விளங்கிய ஜெயலலிதா, அமெரிக்காவில் தங்கத் தாரகை விருது போன்ற பல்வேறு விருதுகளையும், பல்வேறு பல்கலைக்கழங்களின் கௌரவ முனைவர் பட்டங்களையும் பெற்றவர் என்பது நாட்டில் விரல் விட்டு எண்ணக் கூடிய அரசியல் தலைவர்களுக்கே கிடைத்த அங்கீகாரம்.

இந்தியாவின் இரும்புப் பெண்மணி என்று போற்றப்படுபவர் இந்திரா காந்தி. அவருக்கு அடுத்தபடியாக அரசியல் களத்தில் போராடி சாதனைகளை புரிந்தவர் என்றால் அது ஜெயலலிதாவையே சாரும்.

சோதனைகளைத் தகர்த்தெறிந்து, பொய்ப் பிரசாரங்களை முறியடித்து, 10-க்கும் மேற்பட்ட எதிர்க்கட்சிகளின் ஒட்டுமொத்தத் தாக்குதலை தன்னந்தனியே தனது பிரசாரத்தால் முறியடித்து, 2016-இல் முதல்வர் ஜெயலலிதா மீண்டும் வெற்றி பெற்று, வரலாற்றுச் சாதனை படைத்தார்.

எதிர்க்கட்சித் தலைவரான ஜெயலலிதா சட்டப்பேரவையில் தாக்கப்பட்டதையடுத்து, மீண்டும் முதல்வராகவே நுழைவேன் என்று மேற்கொண்ட சபதத்தை 1991-ஆம் ஆண்டு தேர்தலில் வென்று நிகழ்த்திக் காட்டினார்.

2006-11-ஆம் ஆண்டுகளில் திமுக ஆட்சிக்காலத்தில் ஓமந்தூரார் தோட்ட வளாகத்தில் இயங்கிய புதிய தலைமைச் செயலகத்துக்குள் நுழைய மாட்டேன் என்று எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது மேற்கொண்ட சபதத்தையும் 2011-இல் முதல்வராகி, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலேயே தலைமைச் செயலகத்தை மீண்டும் இயங்கச் செய்தார். இவ்வாறாக எடுத்த சபதங்களை நிறைவேற்றிக் காட்டியவர் ஜெயலலிதா என்கிறது அரசியல் வட்டாரங்கள்.

குடியரசுத் தலைவர் தேர்தல்களில் கடந்த 2 தேர்தல்களில் வெற்றி வாய்ப்பு இல்லை என்று தெரிந்தும்கூட, பாஜக கூட வேட்பாளர்களை சரியாக நிறுத்தாத நிலையில், தோல்வி என்று தெரிந்தும் கூட வேட்பாளரை நிறுத்திவைத்து எதிர்ப்புத் தெரிவித்தவர் ஜெயலலிதா. இந்த அளவுக்கு துணிச்சல் எவருக்கும் இல்லை என்பது நிதர்சனம்.

கொண்ட கொள்கையில் உறுதியான இவர், துணிச்சல் மிக்க வீராங்கனையான இவர், தன்னை கடுமையாக, தரக்குறைவாக விமர்சனம் செய்த துரோகிகளையும், எதிரிகளையும் கூட மன்னிக்கும் இளகிய மனம் படைத்தவர் என்பது பலரும் அறிந்ததே... ஆம்.. தனிப்பட்ட முறையில் தாக்குதல் தொடுத்தவர்கள் பலர் இவரிடம் அடைக்கலமாகி பதவிகள்பெற்றதும், இவரிடம் முகஸ்துதி செய்து பதவிகள் பெற்றவர்கள் பிற்காலத்தில் கடுமையான விமர்சனங்களைத் தொடுக்கும்போதும் மௌனத்தையே பதிலாகத் தெரிவிப்பவர்.

தன்னிடம் உள்ளவர்களை மிகவும் நம்புவார். ஆனால், நம்பியவர்கள் தவறு செய்தால் கட்சியிலிருந்தும், ஆட்சியிலிருந்தும் கூட விலக்கிவிடுவார். நட்பு வட்டத்திலும் இது நடந்தது உண்டு. இதே நேரத்தில் உரிய விளக்கம் பெற்று, மறுவாய்ப்பையும் அளித்துவிடும் மனப்பக்குவமும் உண்டு.

இவரது பேச்சில் இடம்பெறும் குட்டிக் கதைகள் சிரிக்க மட்டுமின்றி, சிந்திக்க வைப்பதும் உண்டு. குட்டிக் கதைகள் இடம்பெறாத பேச்சுகள் இல்லையென்றே

கூறலாம்.

பல ஆயிரம் கோடி மதிப்பிலான மக்கள் நலத் திட்டங்களைகூட மக்களுக்கு இடைஞ்சல் அளிக்காத மாபெரும் விழாக்களை நடத்தாமல், எளிய முறையில் விழாக்களை நடத்தி அர்ப்பணிப்பு செய்தவர்தான் ஜெயலலிதா.

2011-ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வரும் தேர்தல்கள் அனைத்திலும் வெற்றி வாகை சூடி, வெற்றி மீது வெற்றியை காட்டியவர். வழக்குகளை சட்டப்படியாக சந்தித்து வெற்றி கண்டவர். தனது சுயநலத்துக்காக, தன் மீதான வழக்குகளுக்காக அரசாங்கத்துடன் எந்தவிதமான சமரசத்தையும் ஏற்றுகொள்ளாமல் பொதுநலத்துடன் செயல்பட்டவர்.... என்று ஜெயலலிதாவின் சாதனைகளை அடுக்கிக் கொண்டே போகலாம்.

தொட்ட காரியங்களில் துலங்கி வெற்றியைக் கண்டாலும், விஷன்-2023 என்பது கனவாகவே ஆகிவிட்டது. 2014-இல் 40 தொகுதிகளிலும் அதிமுகவை களம் இறங்கி, பிரதமர் பதவிக்கான வேட்பாளராக மோடியா அல்லது லேடியா என்று மக்களை கேள்வி எழுப்பினார். அரசியலுக்கு அப்பாற்பட்ட தனது நெருங்கிய நண்பரான மோடியை எதிர்த்த பிரசாரம் ஜெயலலிதாவுக்கு கைகூடியது. மக்களவையில் 3-ஆவது பெரிய கட்சியாக அதிமுகவை உருவாக்கினார். ஆனால், பிரதமர் வாய்ப்பு கிடைக்கவில்லை.

ஆனால், இந்திய பெண்களின் இதயங்களில், அவர்களது மனங்களில் ஜெயலலிதாவுக்கு கிடைத்துவிட்டது அங்கீகாரம்.

மறந்தால்தானே உங்களை நினைப்பதற்கு அம்மா என்று கண்ணீர் விடுகின்றனர் கோடிக்கணக்கான பெண்கள்.

வீறு கொண்ட வீராங்கனையாக இருந்தவர்.... 2016-ஆம் ஆண்டு செப். 22-ஆம் தேதி இரவு உடல்நலக்குறைவால் அப்பல்லோ மருத்துவமனைக்கு சென்றவரை எமன் கூட இரண்டரை மாதங்கள் போராடிதான் வென்றான்.... டிசம்பர் 5-இல் உயிரை பறித்தான்..

வாழ்க்கையே போராட்டமாக இருந்தவர்... அவரது இறப்பும்கூட ஒரு போராட்டமாக அமைந்தது.

ஆம்... இவரைப் போன்ற துணிச்சல் மிக்க பெண் அரசியல் தலைவர் இனி பிறக்கப் போவதில்லை... இவரை யாரும் இனி மறக்கப் போவதும் இல்லை....!

அதிமுக எனும் கட்சியை 4 முறை ஆட்சியில் அமரவைத்து, 6 முறை முதல்வராகப் பதவியேற்ற சாதனையை தமிழகத்தில் இனி முறியடிக்க எவரேனும் உண்டோ....!

கலைத்துறையில் கதாநாயகியாக இருந்தவர்- அரசியல் களத்திலும் கதாநாயகிதான். அதேபோல் இருந்துவிட்டே சென்றுவிட்டார்.

- பாரத் தி.நந்தகுமார்